2007 ஏப்ரல் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் திருப்பணி முடிவுற்றவுடன் குடமுழுக்கு நடத்துவது முடிவுற்று, அதன்பிறகு தேருக்கான கேள்வியை அவர்கள் தனியாகக் கேட்பார்களேயானால், அதற்குப் பதில் அளிக்கத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

28—

வன ஆராய்ச்சி மையம்

*****11604**—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை வனச் சரகத்தில் வன ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தேன்கனிக்கோட்டை வனச் சரகத்தில் தேன்கனிக்கோட்டை, மரகட்டா மற்றும் கோபசத்திரம் ஆகிய மூன்று இடங்களில் வன ஆராய்ச்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் கோபசத்திரம், ஓசூர் சட்டமன்றத் தொகுதியிலும், மரகட்டா, தேன்கனிக்கோட்டை வன ஆராய்ச்சி மையங்கள் தளி சட்டமன்றத் தொகுதியிலும் இயங்கி வருகின்றன. இப்படி இரண்டு வன ஆராய்ச்சி மையங்கள் அந்தத் தொகுதியில் இருக்கின்ற காரணத்தினால், மேலும் ஒரு வன ஆராய்ச்சி மையம் உருவாக்குகின்ற கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள என்னுடைய தளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தேன்கனிக்கோட்டை வனச் சரகம் அடர்ந்த

வனங்களைக் கொண்ட பகுதியாகும். அந்த வனப் பகுதியிலே அனைத்து வகையான தாவர வகைகளும், மர வகைகளும் உள்ளன. பல வகையான தாவரங்களும் மரங்களும் அழிந்து வருகின்ற இந்தச் சூழலிலே, வனங்களை மேம்படுத்தவும், மழை பெறவும் மரங்கள் வளர்ப்பது பற்றிய அவசியத்தை மக்களுக்குத் தெளிவுபடுத்தவும், தேன்கனிக்கோட்டை வனச் சரகத்திலே வன ஆராய்ச்சி மையம் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேன்கனிக்கோட்டை வனச் சரகம், தேன்கனிக்கோட்டையில் ஏற்கெனவே வன ஆராய்ச்சி மையம் செயல்பட்டு வருகிறது. அந்த வன ஆராய்ச்சி மையத்திலே புங்கன், காட்டாமணக்குப் போன்ற அதிக அளவு எண்ணெய் தரக்கூடிய வித்துகளையெல்லாம் ஆராய்ச்சி செய்து, விவசாயிகளுக்குத் தரப்பட்டு வருகிறது. அதைப்போலவே, அவர் குறிப்பிட்டதுபோல நாவல் மரமாக இருந்தாலும் அல்லது மற்ற மரங்களையெல்லாம்கூட ஆராய்ச்சி செய்து, எதிலே அதிக காய்ப்பு தருகின்றதோ அந்த விதைகளைப் பயன்படுத்துமாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டு வருகின்றது. மேலும், அந்தப் பகுதியிலே கால்நடைகள் அதிகமாக உள்ள காரணத்தினால், அந்தக் கால்நடைகளின் தேவைக்கு எந்தத் தாவர வகைகளைப் பயிரிட்டால் அதிகமாக இலாபம் பெறலாம் என்பதும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

முற்பகல் 10–00

தென் மேற்குப் பருவக் காற்றிலும், வட கிழக்குப் பருவக் காற்றுக் காலங்களிலும் அங்கே அதிகமான மழை பெய்கின்ற காரணத்தால் அந்தப் பகுதிகளிலே மற்ற மரங்கள், பிரம்புச் செடிகள், மூங்கில் செடிகள் போன்றவை பயிரிடுவதற்கும், அவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டு வருகிறது. உறுப்பினர்களுடைய தொகுதி மிக உயர்ந்த மலைகள் அடங்கிய பகுதி என்கின்ற காரணத்தால் அந்த இடங்களிலே உயர்ந்த வகை ஈட்டி மரங்களைக்கூடப் பயிரிடுவதற்கு அப்பகுதி விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் சந்தன மரங்களை வளர்ப்பதற்குத் தேவையான உதவிகளைச் செய்ய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2007 ஏப்ரல் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி யோசிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜமுனாமரத்தூர் சந்தன மரத்திற்குப் பெயர் பெற்ற ஒரு மலைப் பகுதி. ஆனால், இன்றைக்கு அங்கே மரங்கள் இல்லாத ஒரு நிலை இருக்கிறது. ஆக, வன ஆராய்ச்சி மையத்தின்மூலம் அங்கே சந்தன மரக் கன்றுகளை மீண்டும் நட்டு, அந்த மலையிலே சந்தன மரங்களை உற்பத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன ஆராய்ச்சி மையங்களில் அதிக எண்ணெய் தரக்கூடிய சந்தன மரங்களை, ஒட்டுக் கன்றுகளை உருவாக்கி, அவை அந்தப் பகுதியிலே இருக்கின்ற தனியார்களுக்கு தரப்பட்டு அதேபோல வனப் பகுதிகளிலும் நடப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

29—

கால்நடை மருத்துவமனை

***7585—திரு. வ. முல்லைவேந்தன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, காளிப்பேட்டையில் கால்நடை மருத்துவமனை துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி மாவட்டம், மொரப்பூர் தொகுதி, பாப்பிரெட்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த காளிப்பேட்டையில் புதியதாகக்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS